2. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

வத்தலக்குண்டு வெடி விபத்து.

* 111 வினா.—திரு. சோ. ஆறுமுகம் (திரு. ம. சங்கரலிங்கம் சார்பில்) : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கீழ்ங்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1980 ஆகஸ்டில் மதுரை மாவட்டம், வத்தலகுண்டில் ஏற்பட்ட வெடி விபத்தில் இறந்தவர்கள் எத்தனை பேர் ?

(இ) இறந்தவர்கள் குடும்பங்களுக்கு அரசு அளித்த உதவி யாது ?

(உ) இறந்தவர்களுடைய உழைப்பால் வாழ்ந்து கொண்டிருந்த குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

(எ) அத்தகைய குடும்பங்களுக்கு அரசு தனியாக உதவி ஏதும் அளித்ததா ?

(ஐ) ஆம் எனில், அதன் விபரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : ஒரு விவர அறிக்கை @ அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

துணைத் தாசில்தார் பதவிகள்.

* 112. வினா—திரு. சோ. ஆறுமுகம் (திரு. ம. சங்கரலிங்கம் சார்பில்) : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பிற மாவட்டங்களிலுள்ள வட்ட அலுவலகங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள கூடுதல் துணைத் தாசில்தார் பதவிகள், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள வட்ட அலுவலகங்களுக்கு அளிக்கப்படவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அம்மாவட்டத்தில், அப்பதவிகளை ஏற்படுத்த அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அம்மாவட்ட ஆட்சித் தலைவரால், புள்ளி விவரத்தின் அடிப்படையில் கோரப்பட்ட, மூன்று துணை வட்டாட்சியர் பதவிகளும் அளிக்கப்பட்டுள்ளன.

@ 93-94 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

(இ) தற்போதுள்ள பணியாளர் நிலைக்கேற்ப மேலும் ஆறு கூடுதல் துணை வட்டாட்சியர் பதவிகள் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியரால் கோரப்பட்டு அது அரசின் பரிசீலனையில் உள்ளது. விரைவில் தக்க முடிவெடுக்கப்பட்டு ஆணை வெளியிடப்படும்.

திரு. க. இராமமூர்த்தி : இந்தக் கூடுதல் துணைத் தாசில்தார்கள் நியமனத்தை அரசு விரைவுபடுத்துமா ? மற்ற மாவட்டங்களிலே இருக்கும் விகிதாச்சாரத்துக்கு (Ratio) ஏற்ப கன்னியாகுமரி மாவட்டத்திலும் தாசில்தார்கள் செயல்படும் அளவிற்கு நிலைமைகளை அரசு உறுதிப் படுத்துமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இந்த அரசு ஆட்சிக்கு வந்த பிறகு, 200 துணைத் தாசில்தார்கள் மாநிலம் பூராவும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆங்காங்கே இருக்கின்ற தேவைக்கேற்றவாறு, ஜனத்தொகைக் கேற்றவாறு, இருக்கின்ற வேலைப்பளு, வரி வசூல், எல்லாவற்றையும் கணக்கெடுத்து தமிழ் நாடு முழுவதற்கும் ஒரேமாதிரியான முறைதான் பின்பற்றப் படுகிறது.

உடற்பயிற்சி இயக்குநர்கள்.

* 113. வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) உயர் நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் பி. பி. எட். பட்டம் பெற்ற உடற் பயிற்சி இயக்குநர்களை, மேல் உயர் நிலைப் பள்ளிகளில் நியமனம் செய்யும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

(இ) 1978-79, 1979-80 மற்றும் 1980-81 கல்வி ஆண்டுகளில், மேல் உயர் நிலைப் பள்ளிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள உடற்பயிற்சி இயக்குநர் பதவிகள் எத்தனை ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மேல்நிலைப் பள்ளி உடற் பயிற்சி இயக்குநர் பதவிக்கு பட்டப்படிப்போடு எம்.பி.எட். பயிற்சி பட்டம் B.A.|B.Sc.|B.Com. உடன் (M.P.Ed.) கல்வித் தகுதியாக நிர்ணயிக்கப் பட்டுள்ளது. ஆதலின் பி.பி.எட். பட்டம் பெற்ற உடற்பயிற்சி இயக்குநர் களை மேல்நிலைப் பள்ளி உடற்பயிற்சி இயக்குநர்களாக நியமிப்பதற்கில்லை.